DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.633/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | **ஸ்ரீதர்** | Age | : | 43 |
| F/N | : | தனகோபால் (எ) தனபால் | Occupation | : | அரிசி கடை வைத்துள்ளேன் |
| Village | : | திரௌபதி அம்மன் கோவில் தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13-rd day of April 2023.

**13.04.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாரதபுரம் மாவட்டம் திரௌபதி அம்மன் கோவில் தெருவில் குடியிருந்து கொண்டு அரிசி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் எதிரி பால்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 21.04.2021ம் தேதி பகல் சுமார் 12.15 மணிக்கு இராமநாதபுரம் கேணிக்கரை முனியம்மா முக்கு அருகே போலீசார் மோட்டார் சைக்கிளில் வந்த பால்ராஜ் என்பவரை விசாரித்தபோது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், கணேசன் என்பவர் முன்னிலையிலும் கேணிக்கரை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றால் சரியல்ல. மேலும் அதன் தொடர்ச்சியாக எதிரி பால்ராஜ் என்பவர் எடுத்து ஆஜர் செய்த ரூ.2000/-த்தை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சியாக கையெழுத்து கேட்டதின் பேரில் நானும், கணேசன் என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டு கொண்டதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை

**மறுவிசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**